சனிற்றறி வெயார்
(SANITARY WARE)
இறக்குமதி செய்த
கொமேட் — Commode
சிஸ்ரேண் மூடியுடன்
ரூபா 975/-ல் இருந்து
வாஷ்பேஷின்கள்
இணைப்புகளுடன் ரூபா 450/-ல்
பாத் (Bath) 4000/- இல் இருந்து
மாபிள்கள், S. LON பைப்புகளும்,
பீலிகளும் மற்றும் இணைப்புகளும்
கிடைக்கும்.
பேபி வாக்கரும், Twistingcar
சமுத்ரா
ரேட்ஸ் லிமிட்.
23/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7236 (1642)

விலை: சதம் 75 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 கார்த்திகை 21 ஸபர் 7 இதழ் 294
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 6-12-81

## மதுரை ஆதீனமும் வருவார்

(கொழும்பு)

இலங்கையில் ஜனவரியில் நடைபெறும் உலக இந்து மகா நாட்டில் மதுரை ஆதீனகர்த்தரும் கலந்துகொள்வார்.

இலங்கையிலிருந்து தமிழகம் சென்ற இந்து கலாசாரபிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை விடுத்த அழைப்பை ஏற்றே அவர் இங்கு வருகிறார். (இ)

கிளிநொச்சி வெள்ள அகதிகளின்

# 50 வீடுகளை மாணவர்கள் கட்டிக்கொடுப்பார்கள்!

## துணிக்கை

[illegible]

## யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை ஏற்பாடு

(ஏ. வி. மாணிக்கம்)

**கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நிர்க்கதிக்குள்ளான குடும்பங்களுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை 50 குடிசை வீடுகளை அமைத்துக்கொடுக்கவிருக்கிறது.**

கிளிநொச்சியில் இரத்தினபுரத்தில் இக்குடிசை வீடுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

யாழ். பல்கலைக்கழகம் நுண்கலை மருத்துவம், கலை, விஞ்ஞானபீடங்களைச் சேர்ந்த சுமார் 1800 மாணவர்களிடமிருந்து நிதி சேகரிக்கப்பட்டு வருவதாகவும் சுமார் 12 000 ரூபாவுக்குமேல் சேருமென தாம் எதிர்பார்ப்பதாகவும் யாழ். பல்கலைக்கழக அவைத்தலைவர் திரு. கே. என். இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

நிவாரணவேலைகள் செய்வதற்கு மாணவர் அவையைச்சேர்ந்த 5 பேர் தொண்டர் குழு ஏற்கனவே அங்கு சென்றுள்ளதாக தெரிவித்த திரு. இராசநாயகம் இன்று 75பேர் கொண்ட குழுவொன்று வீடுகள் அமைப்பதற்கான உபகரணங்களுடன் செல்லவிருப்பதாகவும் அவர் சொன்னார்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத் தொழிலாளர்கள் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்களுக்கும் நிதிசேகரித்து வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### அறவழிப் போராட்டக்குழு

கிளிநொச்சிப்பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறவழிப் போராட்டக்குழுவினர் உடுபிடவைகள், உணவுப்பொரு

[8-ம் பக்கம் பார்க்க]

யாழ். மாவட்டத்தில்

## இறைச்சிக்கு புதிய விலை நிர்ணயம்

### ஜனவரிமுதல்அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள இறைச்சிக் கடைகளில் விற்பனை செய்யப்படும் இறைச்சிக்கான விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

மாநகரசபை, நகரசபை, பட்டினப்பகுதிகளில் ஆட்டிறைச்சி எலும்பில்லாதது ஒரு கிலோ 32 ரூபாவாகவும், எலும்புடன் 30 ரூபாவாகவும் கிராமப் பகுதிகளில் எலும்பில்லாமல் 30 ரூபாவாகவும்

8-ம் பக்கம் பார்க்க)

## கொள்ளையர் தாக்கி ஐவருக்குப் படுகாயம்

### ஆபத்தான நிலையில் மூவர் ஆஸ்பத்திரியில்

(மட்டுவில்)

கொள்ளையடிப்பதற்காக நள்ளிரவில் பயங்கர ஆயுதங்களுடன் வீட்டுக்குள் நுழைந்தவர்களின் தாக்குதலுக்குள்ளான மூன்று பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் ஆபத்தான நிலையிலிருப்பதாகக் கூறப்படுகின்றது.

துப்பாக்கி, வாள், இரும்புக்கம்பி, போன்ற பயங்கர ஆயுதங்கள் சகிதம் மட்டுவிலில் உள்ள ஒரு வீட்டினுள் புகுந்த கொள்ளைக் கோஷ்டியே இத்தாக்குதலை நடத்தியுள்ளது.

நேற்று நள்ளிரவு ஒரு கொள்ளைக் கோஷ்டி மட்டுவிலில் உள்ள வீடு ஒன்றின் கதவைத் தட்டியதாம். வீட்டுக்காரர் கதவைத் திறந்ததும் இரும்புக்கம்பியால் அவர் தாக்கப்பட்டுள்ளார். பின் அவர் மனைவி, மகள், மருமகன் இப்படியே ஐவர் தாக்கப்பட்டனராம்.

துப்பாக்கியால் கொள்ளையர் சுடவும் முனைந்துள்ளனர். ஆனால் துப்பாக்கி வெடிக்கவில்லை. ஐந்து முறை விசையை இழுத்திழுத்து அடித்தும் ஐந்து முறையும்துப்பாக்கி வெடிக்கவில்லையாம். இதனால் ஆத்திரமுற்று துப்பாக்கிச் சோங்காலல் அடித்துள்ளனர். துப்பாக்கிச் சோங்கு முறிந்து கீழே விழுந்துள்ளது. இதன் பின் வாளை உருவி வெட்டினார்களாம்.

இதற்கிடையில் அயலவர்கள் சத்தம் கேட்டு ஓடிவரவே கொள்ளையர் ஓடிவிட்டனர். சாரம் ஒன்று, துப்பாக்கி சோங்கு தோட்டா இவற்றையும் சாராயப்போத்தல் கிளாஸ் ஆகிய பொருட்களையும் கைவிட்டு விட்டுச் சென்றுள்ளனர்.

இரவோடிரவாக சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு காயமடைந்த மூவர் எடுத்துச்செல்லப்பட்டனர். பிரக்ஞையற்ற நிலையில் அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இருவர் படுகாயங்களுடன் வீட்டிலேயே இருந்தனர். வீட்டில் ஒரே இரத்தமயமாகக் காணப்பட்டது.

இதுபற்றி சாவகச்சேரி

[8-ம் பக்கம் பார்க்க]

## புதியபாராளுமன்ற பெயர்ப்படிகம்

(கொழும்பு)

புதிய பாராளுமன்றக் கட்டிடத்தில் பதிக்கப்படும் பித்தளை பெயர்ப் படிகத்தில் முதலில் சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதி தலைவர், பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர் என்ற வரிசையில் பொறிக்கப்படும். அதை அடுத்து தற்போது பதவியிலிருக்கும் எம். பிக்களின் பெயர்கள் சிங்கள அகர வரிசைப்படி பொறிக்கப்படும்.

இவ்வாறு நேற்று முன்தினம் சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற கட்சித்தலைவர் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தமது பெயரைக் கடைசியாகப் போடும்படி மதவாச்சி எம். பி, திரு. மைத்திரிபால சேனநாயக்கா கேட்டுக்கொண்டார்.

பிரதமர் திரு ஆர். பிரேமதாசா, சபாநாயகர் அல் ஹாஜ் பாக்கீர் மாக்கார், எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் ஆகியோரின் அழைப்பை ஏற்று 82ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ம் திகதி மேன்மை தங்கிய ஜனாதிபதியால் இப் பெயர்ப் படிகம் திறந்து வைக்கப் பட்டது என்றும் பிக்களின் பெயர்ப் படிகத்தின் கீழ் பொறிக்கப் படும் (க-இ)

## பேராசிரியர் 'வித்தி' மீண்டும் உபவேந்தர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உபவேந்தராக பேராசிரியர் சு. வித்தியானந்தன் 23 வாக்குகள் பெற்று மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் போட்டியிட்ட கணிதவியல் துறை பேராசிரியர் வி. தர்மரத்தினம் 14வாக்குகள் பெற்றுள்ளார்.

இத்தெரிவுக்குப் போட்டியிட்ட டாக்டர் பாலசுப்பிரமணியமே கனாகனுக்கு ஒரு வாக்கும் அளிக்கப்படவில்லை.

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் தேர்தல் நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக செனட் கட்டிடத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் யாழ் பல்கலைக்கழகவேந்தர் கலாநிதி கைலாசபதி தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழகசபை அங்கத்தவர்கள் 41 பேரில் 37 பேர் வாக்களித்தனர்

மூவர் வாக்களிக்கவில்லை. வேந்தர் தமது வாக்கை பிரயோகிக்கவில்லை.

### பாராட்டு

யாழ், பல்கலைக்கழக உபவேந்தராக பேராசிரியர் வித்தியானந்தன் தெரிவுசெய்யப்பட்டதையொட்டி பல்கலைக்கழக மாணவர் அவைத்தலைவர் திரு கே. என் இராசநாயகம் பாராட்டும் மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளார். யாழ். பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ந்தும் நிறைவேற உபவேந்தருக்கு பூரண ஒத்துழைப்பு மாணவர்களிடமிருந்து கிடைக்குமென உறுதியாக்கவும் அவர் தெரிவித்துள்ளார். (மா)

# மாவட்ட இணைப்புக்குழு விரைவில் நிறுவப்படும்

## சபையில் பிரதமர்

(கொழும்பு)

அபிவிருத்தி வேலைகளைத் துரிதமாகவும், சிறப்பாகவும் நடத்துவதற்கு மாவட்டம் தோறும் விரைவில் மாவட்ட இணைப்புக் குழுக்கள் நிறுவப்படும்.

இத்தகவலை பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்றுப் பாராளுமன்றத்தில் வெளியிட்டுக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஜனாதிபதி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், பொது நிர்வாக அமைச்சர் ஆகியோர் தயாரித்த இத்திட்டத்திற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் இன்னும் ஒரு மாத காலத்தினுள் கிடைக்கும்.

இணைப்புக் குழுக்களில் அரசாங்க அதிபர்கள், எம். பி.க்கள் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டங்களில் அந்தந்த மாவட்டங்களின் சகல அதிகாரிகளும் அவசியம் கலந்து கொள்ளவேண்டும்.

மாவட்டச் செயலகங்களிலும் அந்தந்த மாவட்டங்களின் சகல புள்ளி விபரங்களும் சேகரிக்கப்படவேண்டும். அதற்கென ஒரு பிரத்தியேகப் பகுதி அமைக்கப்படவேண்டும். (இ)

# கொழும்பு மாநகர அபிவிருத்திக்கு ரூ. 9 கோடி

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை நிர்வாகத்தை நவீனப்படுத்தவும், தீவிரப்படுத்தவும் அரசாங்கம் 9 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கொழும்பு மாநகர மேயர் சிறிசேன கூரே விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலமாக முதலீட்டுக்கே அதிகமான தொகை வழங்கப்படவிருக்கிறது. மாநகரசபை ஊழியர்களின் சம்பளமும் அதிகரிக்கப்பட உள்ளது. (இ)

மனித உரிமைகள் தினம்

# அறவழி போராட்டக்குழு பிரார்த்தனையில் ஈடுபடும்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் தினம் தொடர்பாக இலங்கை அறவழிப் போராட்டக்குழு இம்மாதம் 10ம் திகதி நல்லை செல்வ சந்நிதி ஆலயத்தில் சகல மக்களினதும் மனித உரிமைகள் பேணப்படல் வேண்டும் என்பதற்காக காலை தொடக்கம் பிற்பகல் வரை குழுவின் மூன்று உறுப்பினர்கள் பிரார்த்தனையில் ஈடுபடவுள்ளனர்.

அதேசமயம், நல்லூர் ஆலயத்தில் பாரிய சிரமதானம் ஒன்றில் 50 க்குமேலானதொண்டர்களும் ஆதரவாளர்களும் ஈடுபடவுள்ளனர்.

அன்றையதினம் மாலை, சாவகச்சேரி நகரசபையுடன் இணைந்து மனித உரிமைகள் தினப் பொதுக்கூட்டத்தினையும் நடாத்தவுள்ளனர்.

வருந் வெள்ளிக்கிழமை மனித உரிமைகள் தினம் தொடர்பாக உடுப்பிட்டித் தொகுதியில் சமத்துவ வழிபாட்டுக்கு அனுமதி வழங்கப்படாமல் இருக்கின்ற ஆலயத்தில் சமத்துவ வழிபாட்டினை நடாத்துவதற்கான முயற்சியில் இக்குழு ஈடுபடவுள்ளது. (மா)

கசிப்பு வழக்கு

# 2 பெண்கள் உட்பட மூவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக கசிப்பு விற்றதாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் இருபெண்கள் உட்பட மூவருக்குத் தலா 500 ரூபா அபராதமும் ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ரி. ஜோசப் முன்னிலையில் நடைபெற்றது.

கொண்டாவில் வடக்கில் இரு பெண்கள் உட்பட மூவர் மீது சட்ட விரோதமாக கசிப்பு விற்றதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது. (மா)

# புற்றுநோய்க்கு வருடாந்தம் 5 லட்சம்பேர் பலி

சென்னை, டிச. 5

இந்தியாவில் புற்று நோயினால் வருடாந்தம் 5 லட்சம் பேர் மரணமாகின்றனர் என தெரிவிக்கப்பட்டது.

திருவனந்தபுரத்தில் நடைபெற்ற புற்றுநோய் மகாநாட்டிலேயே மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது. (இ)

# வெள்ளத்துக்கு 67 பேர் பலி!

பிரேஸிலியா, டிச. 5

தென்கிழக்கு பிரேஸிலில் கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் பெருமழை காரணமாக 67 பேர் மரணமாகினர் என அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]


# கிறிஸ்மஸ் கால மலிவு விற்பனை

தைவானிலிருந்து வரவழைக்கப்பட்ட

- ☆ கிறிஸ்மஸ் ஜோடனைகள்
- ☆ அலங்கார மின்குமிழ்கள்
- ☆ பிறெஷர் குக்கர்கள்
- ☆ வீட்டை அலங்கரிக்கும் அநேகபொருட்கள்

இன்னும், காகிதாதிகள், மின்னியல் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், பாவனைப் பொருட்கள் நியாய விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற சிறந்த ஸ்தாபனம்.



# அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகளும், மின்சார ஒப்பந்தகாரரும் - விற்பனையாளரும்)

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 8291, தந்தி: 'வாணர்சன்ஸ்'

(கைடத்தெரு பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக)

தலைமையகம்:

பேர்ள் லைட்ஸ்- அம்பலவாணர் சன்ஸ்,

78, மலிபன்வீதி, கொழும்பு. 11 போன்: 24821 28244

லெட்சுமிபவான், 97, ஒல்ஹொட் மாவத்த, கொழும்பு 11.


இலங்கைத் தமிழர் பிரச்னை:

# எம்.ஜி. ஆரின் அக்கறைக்கு வீரமணி பாராட்டு

சென்னை, டிச. 5

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து மாஜனரை அழைத்துக்கட்சித் தலைவர்களுடனும் புதுடில்லி சென்று பிரதமர் திருமதி இந்திராகாந்தியிடம் வலியுறுத்த தேவையில்லை.

இவ்வாறு திராவிடர் கழகச் செயலாளர் திரு கே. வீரமணி தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தமிழர்கள் படும் இன்னல்கள் குறித்து தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கொண்டுள்ள அக்கறை பாராட்டுக்குரியது என்றும் தெரிவித்த திரு. கே. வீரமணி மேலும் கூறியதாவது:

பிரதமர் திருமதி இந்திரா காந்தி விரைவில் தமிழகத்திற்கு வரவிருக்கிறார் எனவே புதுடில்லியில் கொடுக்க இருக்கும் மகஜரை தமிழகத்திலேயே கையளிக்கலாம்.

[illegible] முதல்வரும் மற்றும் கட்சித் தலைவர்களும் புதுடில்லி சென்று மகஜர் கையளிப்பது அர்த்தமற்ற செயல். எனவே திரு இராமச்சந்திரன் தமது முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும். (இ)

ஐ. நா. பொதுச்செயலாளர் பதவி:

# போட்டியிலிருந்து விலகும் நோக்கம் இல்லை ஜனப் அகமட் சலீம் அறிவிப்பு

நியூயோர்க், டிச. 5

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பதவிக்கான தேர்தலில் தாம் தொடர்ந்தும் அபேட்சகராக இருப்பதாகவும் போட்டியில் இருந்து விலகும் நோக்கம் தமக்குக் கிடையாது என்றும் தன்சானிய வெளிவிவகார அமைச்சர் ஜனப் அகமட் சலீம் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், ஜனப் சலீமை இத்தேர்தலில் தொடர்ந்து போட்டியிடுமாறு வலியுறுத்தி வரும் 41 ஆபிரிக்க நாடுகள், இத்தேர்தலில் ஜனப் சலீமுக்கு ஏற்படும் செலவுகளைத் தாமே ஏற்றுக்கொள்வதாகவும் அறிவித்துள்ளது.

இத்தேர்தலில் போட்டியிட தற்போதைய பொதுச் செயலாளர் டாக்டர் குர்ட் வால்ட்ஹெய்ம் விலகிக் கொண்டது தெரிந்ததே.

" ஊழியர் பேரவைச்சட்டத்தின்

# நல்ல நோக்கங்களைப்புரிந்து செயல்படவேண்டும்"

— யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

"இந்நாட்டின் அபிவிருத்தியில் தொழிலாளர் பங்கு மிக முக்கியமானது" என்று யாழ். அரசாங்க அதிபரும் யாழ். மாவட்டச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா ஊழியர் பேரவை உறுப்பினர்களுக்கான தொழிலாளர் கல்வியும் தலைமைத்துவப் பயிற்சியும் சம்பந்தமான கருத்தரங்கை நேற்றுக்காலை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட அலுவலகத்தினால் நடாத்தப்பெறும் இக்கருத்தரங்கு யாழ் நகரிலுள்ள பிரபல ஹோட்டலில் மூன்று நாட்கள் நடைபெறுகிறது.

திரு தேவநேசன் நேசையா தொடர்ந்து உரையாற்றுகையில், "இக்கருத்தரங்கில் பொறுப்பான பங்கு வகிக்கும் நீங்கள் ஊழியர் பேரவைச் சட்டத்தின் நல்ல நோக்கங்களைப் புரிந்து, அனுபவித்து, மற்றைய சக ஊழியர்களுக்கும் எடுத்துக் கூறமாறு கேட்டுக் கொண்டார்.

யாழ். மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் திரு. வி. மகாலிங்கம், யாழ் தொழில் அதிகாரிகள் திருமதி ச. பரமசாமி, திரு. பி கே. செல்வராசா ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். (வ)

இறக்குமதியாகும் மருந்துகள்

# பங்களாதேஷில் 5 சத வீதத்தினரே வாங்குகின்றனர்

மாகிலா, டிச. 4

மருந்துகள் தயாரிக்கும் பல நாட்டு நிறுவனங்களுக்கு எதிராகவும்; மனிதனது நல்வாழ்வுக்காக மருந்துத் தொழில் துறையைப் பயன்படுத்துவது - சுகாதார கவனிப்பு ஆகியவற்றுக்கான சர்வதேச தொழிற் சங்க மகாநாடு கடந்த வாரம் இங்கு நடைபெற்றது உலகின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள 67 நாடுகளிலிருந்து 250 க்கும் அதிகமான பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

மகாநாடு குறித்து பங்களாதேஷ் தொழிற்சங்கப் பிரதிநிதி டாக்டர் வாஜதுல் இஸ்லாம் பத்திரிகையாளரிடம் கூறுகையில்; "மருந்துகள் தயாரிக்கும் பல நாட்டு நிறுவனங்கள். மருந்துவத் தொழில்துறையே இல்லாத ஏழை நாடுகளுக்கு தமது பொருட்களை அதிக விலையில் விற்கின்றன. இவை வளர்முக நாடுகளுக்குத் தாங்க முடியாத விலைகள். சரியாகச் சொல்வதாயின் பங்களாதேஷில் 5 சதவீத மக்களே இந்த விலையுயர்ந்த மருந்துகளை வாங்கக் கூடியவர்களாக உள்ளனர்" என்று தெரிவித்தார்.

ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் வாழும் மக்களில் 98 7 சதவீதமானோர் மேற்குலக நிறுவனங்களினால் தயாரிக்கும் மருந்துகளையும் பாவிக்கின்றனர்.

இலங்கை நாடுகளின் மருந்துப் பொருள் தொழில்துறைக்கு சோவியத் யூனியனும் இதர சோஷலிச நாடுகளும் அளித்து வரும் உதவிகளுக்கு பிரதிநிதிகள் நன்றி தெரிவித்தனர்.

# ரெட்டி கவலை

புதுடில்லி, டிச. 5

இந்திய சரித்திரப் புகழ் வாய்ந்த குதுப்மினார் கோபுர ஏணிப்படிகள் தகர்ந்து 45 பேர் பலியான சம்பவம் குறித்து இந்தோனேஷியாவிலிருக்கும் இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார்.

பலியானவர்களில் அதிகமானோர் குழந்தைகள் என்பதே மிகவும் கவலைக்குரியதாகும் என்றும் திரு. ரெட்டி தமது செய்தியில் தெரிவித்துள்ளார் (இ)

# 'கிளிநொச்சி தனி மாவட்ட கோரிக்கை நியாயமானதே'

## சபையில் உள்நாட்டு மந்திரி

(கொழும்பு) கிளிநொச்சி மாவட்டம் தனிமாவட்டமாக மாற்றப்படவேண்டும் என்ற கிளிநொச்சி எம். பி. ஆனந்தசங்கரியின் கோரிக்கை நியாயமானது. அது ஆலோசிக்கப்படும்" என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நிதி ஒதுக்கீட்டுமீதான விவாதத்தில் பதிலளித்துப்பேசுகையில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் கூறினார். அமைச்சர் மேலும் பேசுகையில் யாழ். எம். பி. வெ. யோகேஸ்வரனின் கோரிக்கையான பிறப்புச் சான்றிதழ்களில் "சாதி" எனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி நீக்கப்பட்டு "இனம்" என்று மாற்றப்படவேண்டும் என்பது கவனத்தில் எடுக்கப்பட்டு மாற்றப்படும்" என்று தெரிவித்தார்.

இவ்விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கிளிநொச்சி எம்.பி. திரு. ஆனந்தசங்கரி "யாழ். மாவட்டத்தின் பெரும்பகுதியை அதாவது 534 சதுரமைல் விஸ்தீரணம் கொண்டது கிளிநொச்சி. ஆனால் அது பின்தங்கிய மாவட்டமாக உள்ளது. இது யாழ் மாவட்டத்துடன் சேர்ந்து இருப்பதால் பின்தங்கிய மாவட்டத்திற்குக் கிடைக்கும் சலுகைகள் இம்மாவட்டத்திற்கு கிடைப்பதில்லை" என்றார். (ம-து)

## கவிதை நூல் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்) 'ஓ சமுதாயமே' என்ற கவிதை நூல் யாழ். றோட்டரி கழகத்தினால், இன்று யாழ். செயலகத்தில் நடைபெறும், சர்வதேச அங்கவீனர் ஆண்டு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் வெளியிடப்படவிருக்கிறது.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு யூ பி விஜேகோன் தலைமையில் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக இறுதி ஆண்டு சித்திர நெசவுக் கலைமாணிப் பட்டப்படிப்பினை மேற்கொண்டுள்ள செல்வி மங்களராணி கிறிஸ்தோபர் இக்கவிதை நூலை எழுதியுள்ளார். (உ-நி)

## வெள்ளையறிக்கை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்) மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரின் வெள்ளை அறிக்கை ஆய்வு கருத்தரங்கு, கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இம்மாதம் 8ம் திகதி காலை நடைபெறும்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. க. சுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றி வைப்பார். தே. இ. சே. மன்ற உதவி இயக்குனர் திரு. ஏ. நாகேந்திரன் ஆரம்ப உரை நிகழ்த்துவார். திருவாளர்கள் க. சிவானந்தமூர்த்தி, இ. சிதட்சணமூர்த்தி, மா. சண்முகதாசன், இராசின்னத்தம்பி ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். (உ)





# நெஸ்பிறே

## வளரும் பருவத்திற்கு வாய்த்த பால்.

இவர்கள் கருத்தூன்றிப் படிக்கிறார்கள்... அறிவுக் கூர்மைக்கு ஆரோக்கியமான உடலும் தேவை. உங்கள் பிள்ளைகளுக்கு நெஸ்பிறே கொடுங்கள். காலை உணவின்போது, படுக்கைக்கு முன் அல்லது எந்நேரம் வேண்டுமானாலும் கொடுக்கலாம். குறிப்பாக, படிப்பில் விசேஷ கவனம் செலுத்தும் போது அவர்களுக்கு நெஸ்பிறே தேவை.

நெஸ்பிறே – உலகின் தலைசிறந்த பண்ணைகளில் இருந்து கிடைக்கும் சுத்தமான முழு ஆடைப் பால்மா. சுகாதார முறைப்படி பதனிடப்பட்டது; 28 சதவீத பால் கொழுப்பும் விற்றமின் 'ஏ','பி' சத்துகளும் கொண்டது.




**நெஸ்பிறே**
வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.

400 கிராம் ரூ. 23-90
1 கிலோ ரூ. 88-50

**Nestle**
ஒரு நெஸ்லே தயாரிப்பு

'சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில்

# எதிரிகளின் கை, கால்களைக் கட்டி தலைகீழாகத் தொங்கவிட்டார்கள்'

## சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க கொள்ளைவழக்கில்சாட்சியம்

(சாவகச்சேரி)

''சாவகச்சேரிப் பொலிசார் என்னை 1980-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு நாள் இரவு 11 மணிக்குக் கைது செய்து சாவகச்சேரிக்குக் கொண்டுவந்தார்கள். நான் அங்கு சென்றதும் பொலிஸ் நிலைய மேசையிட்டுக் என்னை இருக்கவிட்டு 1-ம், 2-ம் எதிரிகளின் கைகள், கால்கள் கட்டப்பட்டுத் தலைகீழாகத் தொங்கவிட்டார்கள்''

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அப்துல் கமால் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி இ. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது. இவ்வழக்கில் சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பண்டகசாலையை உடைத்து 4320 ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடியதாக, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நிசாம், மீசாலையைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

களவுப்பொருட்களை விற்கக் கொடுத்தவராகிய அப்துல் கமால் தந்து சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

''சம்பவதினத்தின் மறுநாள் நான் வீட்டிலிருக்கும்பொழுது 1-ம், 2-ம் எதிரிகள் வந்து, ''சில சாமான்கள் கொண்டு வந்துள்ளோம், அவற்றை விலைப்பேசி வந்து பெறும்படி'' கூறிச்சென்றார்கள் நான்கிளப்புக்குச் சென்றபொழுது சாமான்களைத் துண்டில் எழுதித் தந்தார்கள் விலையையும் குறித்துத்தந்தார்கள்.''

2-ம் எதிரி:- உம்மை எப்போது எங்கே பொலிசார் கைதுசெய்தார்கள்?

சாட்சி:- 1980-ம் ஆண்டு டிசம்பர் மாதமாக இருக்கலாம். திகதி ஞாபகமில்லை. யாழ்ப்பாணத்தில் என்னைக் கைதுசெய்தார்கள்.

2-ம் எதிரி:- கைது செய்து எங்கே கொண்டு சென்றார்கள்?

சாட்சி:- சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்திற்கு.

2-ம் எதிரி:- அப்பொழுது எதிரிகள் அங்கு இருந்தார்களா?

சாட்சி:- அவர்களையும் யாழ் பொலிஸ் நிலையத்திலிருந்து அப்போதுதான் கொண்டுவந்தார்கள்.

2-ம் எதிரி:- 1-ம், 2-ம் எதிரிகளை எவ்வாறு விசாரணை செய்தார்கள்?

சாட்சி:- அவர்களின் கைகளையும் கால்களையும் பிணைத்துத் தலைகீழாகத் தூக்கி உண்மையறிய முயற்சித்தார்கள் வேறு இடங்களில் களவு பற்றியும் விசாரித்தார்கள்.

2-ம் எதிரி: இந்த எதிரிகளுக்குப் பொலிசார் இவ்வளவு சித்திரவதைகளை செய்ததைக் கண்டபின்னும் உண்மைக்கு மாறாகப் பேசுகிறீரே?

சாட்சி: நான் நடந்ததைத்தான் கூறுகிறேன். ஒரு காலமும் பொய் கூறமாட்டேன்.

2-ம் எதிரி:- உம்மையும் விளக்கமறியலில் வைப்போம் என்று பொலிசார் கூறவில்லையா?

சாட்சி:- இல்லை.

1982-ம் ஆண்டு பெப்ரவரி 1-ம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ)

பாதுகாப்பு அதிகாரியை

# பயமுறுத்தினர்களாம்; இளம்பெண்கள் றிமாண்டில்

(யாழ்ப்பாணம்)

தகாத நடத்தையில் ஈடுபட்டதாகக் கைதுசெய்யப்பட்ட இரு இளம் பெண்களை யாழ். நீதவான் இம்மாதம் 7ந் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

யாழ் பொலிஸ்நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஸ்ரீதரன் இவ்விரு பெண்களையும் யாழ் பண்ணைப் பகுதியில் வைத்துக் கைதுசெய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்.

யாழ் நீதவான் ரி ஜோசநாதன் இரு பெண்களையும் தலா 100 ரூபா ரொக்கப் பிணையில் செல்லுமாறும், இம்மாதம் 7ந் திகதி கோர்ட்டில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

இவர்கள், பாதுகாவல் அதிகாரி திருமதி சிவதாசனை பயமுறுத்தியதாக நீதவானின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இம்மாதம் 7ந் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (மா)

# உதவிப்பொலிஸ் அதிபர்கள் இடமாற்றங்கள்

(உடுப்பிட்டி)

பதுளை உதவிப் பொலிஸ் அதிபர் திரு ரீ சீ எம். பெரேரா மட்டக்களப்பிற்கும், மட்டக்களப்பு பொலிஸ் அதிபர் திரு. எல். ஜி ரணதெனிய பதுளைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

தங்காலை உதவிப் பொலிஸ் அதிபர் திரு எம். ஏ ஜெயதிலகா வெலிப்புவிற்கும், குருணாகல உதவிப் பொலிஸ் அதிபர் திரு எஸ் கே. சமிதகலிக்கும், கண்ணூர் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எம் எஸ். டீ கல்லில் சீ ஐ. டி. பிரிவிற்கும், மாத்தறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எஸ் ஏ. செனவிரத்தின தம்மாலைக்கும், களுத்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு டீ எஸ் சுமணவீர தங்காலைக்கும், பதுளை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். எம் செனிவரத்ன பண்டார கண்ணூருக்கும் இடமாற்றம் பெற்றுள்ளார்கள்.

கம்பஹா உதவிப் பொலிஸ் அதிபர் திரு. பி. ராஜேஸ்வரா புத்தளத்திற்கும், புத்தளம் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ரீ. சீ. ஜோசப் கம்பஹாவிற்கும், காலி உதவிப் பொலிஸ் அதிபர் திரு. பி. விஜயநாயக்கா வெலிமடவிற்கும், தெல்தெனிய உதவிப் பொலிஸ் அதிபர் திரு ஜீ. பி. சிறிசோமா வெலிமடவிற்கும், கம்பஹா உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சமரக்கோன் தெல்தெனியாவிற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

வவுனியா உதவிப் பொலிஸ் அதிபர்கள் திரு எஸ். ரணசிங்க, திரு ஜே ராஜபக்ஷ ஆகியோர் முறையே கம்பஹா, குருணாகல ஆகிய இடங்களுக்கும், கொழும்பு உதவிப் பொலிஸ் அதிபர் திரு எஸ பீ ஏ. பெரேரா கம்பஹாவிற்கும், அனுராதபுரம் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஏ. ஏ. சமரசிங்க களுத்துறைக்கும் இடமாற்றம் பெற்றிருக்கிறார்கள்.

மூதூர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஐ பி பண்டார கல்வெட்டித்துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (வ)

# சுருக்கெழுத்து வகுப்புகள்


(சாவலூர்)

தீவுப்பகுதி மாணவர்களின் நன்மைகருதி வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மகா வித்தியாலயத்திலும் ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சு பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப் பயிற்சி வகுப்பில் இருபத்தெட்டு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வடமாநிலக் கல்வி அதிபதி திரு க. சிவநாதன் தெரிவித்தார். (உடுப்-நி-௧)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


ரீப்போல் பீங்கான்-கழுவிப் போட்டியில் பங்குபற்றி



அதிநவீன சமையலறைத் தளபாடங்கள் அனைத்தையும் வெல்லுங்கள்!

ரீப்போல் பீங்கான்-கழுவி போத்தலில் காணப்படும் 'E' எழுத்துக்களைக் கணக்கிட்டு பின்வரும் பரிசுகளைத் தட்டிக்கொள்ளுங்கள்.

- ★ அதியற்புத நவீன சமையலறைக்குரிய எல்லா வசதிகளையும் கொண்ட இறக்குமதி செய்யப்பட்ட 'ஸ்றையர்' தளபாடத் தொகுதி.
- ★ நவீன 'பேபி பெலிங்' மின்சார அடுப்பு
- ★ தாழ் வெப்ப மின்சார சமையல் பாத்திரம். (Slow Cooker)
- ★ அழுப்பிடிக்காத 'பேபர்' சமையல் பாத்திரங்களின் தொகுதி.
- ★ 'ஸ்வான்' மார்க் மின்சாரக் கேத்தல்.

ஆறுதல் பரிசுகள்:

- ★ 10 'தேர்மொஸ்' வெந்நீர்க் குடுவைகள்.
- ★ 10 நீர் சூடாக்கும் மின்சாரக் கம்பிச்சுருள்.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்

1. இரண்டு ரீப்போல் பீங்கான்-கழுவி போத்தல்களை வாங்குங்கள் ஒவ்வொன்றிலும் விசேஷ ஒரேஞ்சு நிற LANKEM லேபல் ஒட்டப்பட்டிருக்கிறதா என்பதை கவனமாகப் பாருங்கள்.
2. ரீப்போல் பீங்கான்-கழுவி போத்தல் ஒன்றில் 'E' எனப்படும் ஆங்கில எழுத்து எத்தனை தரம் காணப்படுகின்றது என்பதைக் கணக்கிடுங்கள். (பெரிய 'E' எழுத்துக்களும் சிறிய 'e' எழுத்துக்களும் கணக்கெடுக்கப்பட வேண்டும்)
3. உங்கள் விடையை கீழே காணப்படும் கூப்பன் படிவத்தில் எழுதுங்கள்.
4. நிரப்பப்பட்ட கூப்பனை நீங்கள் ரீப்போல் பீங்கான் கழுவி போத்தல்கள் இரண்டை வாங்கியதற்கான பற்றுச்சீட்டு அல்லது பற்றுச்சீட்டுக்கள், போத்தல்களில் ஒட்டப்பட்டிருந்த இரண்டு ஒரேஞ்சு நிற Lankem லேபல்கள் ஆகியவற்றுடன் சேர்த்து 15.1.1982 திகதிக்குப் பிந்தாமல் கூப்பனில் குறிக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'ரீப்போல் பீங்கான் - கழுவிப் போட்டி' என்று குறிப்பிடவும்.
5. ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம்.

முதலில் திறக்கப்படும் சரியான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தவருக்கு முதலாவது பரிசான இறக்குமதிசெய்யப்பட்ட 'ஸ்றையர்' சமையலறைத் தளபாடத்தொகுதி வழங்கப்படும். சுவர் அலுமாரி, அடுக்குத் தட்டுகள், லாச்சித்தொகுதி, நிலஅலுமாரி, அடுத்தள அலுமாரி ஆகியவற்றுடன் கறல் பிடிக்காத உருக்கிலான கழுவு தொட்டியும் நீர்வாய் குழாயும் கொண்ட அதியற்புதமான பரிசு இதுவாகும்.

இரண்டாவதாகத் திறக்கப்படும் சரியான விண்ணப்பத்திற்கு இரண்டாவது பரிசான 'பெலிங்' மின்சார அடுப்பு வழங்கப்படும்.

தீர்ப்பு 20.1.1982 திகதி இடம்பெற்று பின்னர் வெளிப்பு பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. எவ்வித கடிதத்தொடர்பும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது.

லங்கெம் சிலோன் லிமிடெட், ஜூலியஸ் கொஸ்பூர் சன்ஸ் லிமிட்டெட், ரிறுஸ் கெம்பன் அன்ட் எக்கார் (லங்கா) லிமிடெட் ஆகியவற்றின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தினரோ இந்தப்போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

விரையுங்கள், இல்லத்தரசிகளே! இன்றே ரீப்போல் பீங்கான் கழுவி வாங்கி அற்புதமான பரிசொன்றை வெல்லுங்கள்!

ரீப்போல் பீங்கான்-கழுவிப்போட்டி
தி றுஸ் கெ. அன் ட் (லங்கா) லிமிட்.
த. பெ. இ. 1119, கொழும்பு.
ரீப்போல் பீங்கான் கழுவி போத்தலில் காணப்படும் 'E' 'e' எழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை

பெயர்:

முகவரி:

S/300



ரூ. 17.00

LANKEM

Grant KE 4207

## பார்வையிட்டனர்

(உடுப்பிட்டி)

இனி நோச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை யாழ். மேற்றிராசன பரிபாலர் வண பிதா மைக்கல் சாமி தலைமையில் சென்ற மேற்றிராசனக் குழு பார்வையிட்டது.

பிரஸ்தாப குழு யாழ் ஆயர் அதி வந். சவரிமுத்து வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையிடம் வெள்ளப் பாதிப்பு பற்றி தெரிவித்துள்ளது. (க)

## தொலைபேசி இணைப்பு

(உடுப்பிட்டி)

வடமாகிலக் கல்வி அதிபதி திரு க. சிவநாதனின் துன்னாலையில் உள்ள வீட்டிற்கு தொலைபேசி இணைப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டை கல்வி அமைச்சு செய்து கொடுத்துள்ளது. [ச]

## தேவை

கைத்தறி ஆசிரியை. சிறிய கைத்தறி நிலையத்தை நடத்தக்கூடிய தரமுள்ள ஆசிரியை உடனடியாகத் தேவை. உற்பத்திக்கேற்ற விசேட சன்மானம் உண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1687 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 1637

வேலைக்கு ஆள்கள் தேவை. தேர்வுப் பரீட்சைக்கு சகல தஸ்தாவேஜுகளுடனும் 20-45 வயது வரை உள்ளவர்கள் சனி 5-12-81, ஞாயிறு 6-12-81 நேரில் வரவும். டாக்டர் செல்லப்பா சனரி வேலை, சைவப் பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு கோண்டாவில். 1638

## FOR SALE

Available for sale with Hire Purchase Facilities:-
Isuzu T L D. 23 (250) Single Rear Wheel Truck
Isuzu T L D. 54 (250) Double Rear Wheel Truck
Mitsubishi Rosa 1978 Model 29 Seater Bus
Polyplastic Chairs
Onduline Roofing Sheets
Luxor T V Sets

THE CENTRAL FINANCE CO LTD.
250 K K S. Road, Jaffna.

நீங்களே
திருமணப் பொருத்தம் பார்க்கலாம்.
இலங்கை சோதிட ஆய்வுமன்ற வெளியீடு
"திருமணத்திற்கு எண்திரு"
விலை 5-00 ரூபா
பூபாலசிங்கம் புத்தகசாலை,
பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.

## டீசல் என்ஜின்கள் தேவை

டீசல் என்ஜின்கள் தேவை. பிளக் ஸ்டோன் (BLACK STONE) 26, 31 ஹோஸ்பவர். HEAD முழுதுடையது விரும்பத்தக்கது. லிஸ்டர், பெற்றர் 5 முதல் 35 வரை ஹோஸ்பவர். கடிதம் மூலம் மட்டும் உடன் தொடர்புகொள்க.

**K. G. மகாதேவா**
செருக்கப்புலம் ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு
1648

## வகுப்புகள்

சென் பீற்றர்ஸ் மெதடிஸ்த சபை

பின்வரும் வகுப்புக்களை 1982-ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ட்ரிமர் மண்டபத்தில் நடத்தும்.

1. பாலர்பாடசாலை 1-1-1982-ல் திகதியில் 3 வயதிற்கும் 5 வயதிற்கும் உட்பட்டவர்களுக்கு.

2. பெண்களுக்கு பாலர்பாடசாலை ஆசிரியப் பயிற்சி (ஆங்கிலம்/ தமிழ்)

3. பெண்களுக்கு ஆங்கில மொழி (1 வருடம்) ஆங்கிலப் பேச்சு (6 மாதம்)

விண்ணப்பப் பத்திரங்கள் பின் வரும் முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். மார்கழி 18-ம் திகதி வரை விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

எல்லா வகுப்புகளும் 1981-ம் ஆண்டு தை மாதம் 18-ம் திகதி ஆரம்பமாகும்.

செல்வி எம். தம்பையா,
இல. 9, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(1575)

## சிப்பித்தூள் (Lime Powder) தேவை

எமக்கு சிப்பியை உடைத்து நல்ல முறையில் பவுடர் பண்ணி 30 மெஸ்லில் (Mesh) தரக்கூடியவர்கள் விலை விபரங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்**
நீர்வேலி. 1620

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் சகல வசதிகளும்கொண்ட இரண்டு வீடு வளவும் கொழும்பு துறையில் வெறும் காணிகளும் விற்பனைக்குண்டு துரைரத்தினம், 50, பாரதி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் 1 39

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் நவீன வீடும், 3 துண்டுக் காணிகளும் உண்டு. உடன் வசதி உண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். 78, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 1643

1ஸ்ரீ 6451 பேசன் பிறிபெக்ற் கார் நல்லநிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க: சதானந்தன், 35, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். 1644

புதிய ஜெனிக்கா124 G கமரா என்லாஜ்ஜர், பிளாஸ்கள், கபினற் கமரா. தொடர்பு கொள்ளவும்: P. S. S. சிமா, 120, நாவலர்றோட், யாழ்நகர். 1676

காங்கேசன் பிரதான வீதி அச்சுவேலியில் (பத்தமேனி) ஏறக்குறைய 84 பரப்பு தோட்டக்காணி இறைப்பு கிணற்றுடன் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். ரவீந்திரன், இல: 106, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1563

எலக்ரோ பிளேட்டிங் செய்யும் சகல உபகரணங்களும், மோட்டர்களும் உடனடியாக விற்பனைக்குண்டு. வேலழகன் தொழிற்சாலை, சுன்னாகம் 1631

அரியாலை பூதர் சொரூபத்திற்கு முன்பாகவும், கண்டி றோட்டில் அமைந்துள்ள 7½ பரப்பு, 6 பரப்புக் கொண்ட குடியிருப்புக்கேற்ற இரு காணிகள் உடன் விற்பனைக்குண்டு தொடர்புகொள்க: 123, பிரதான வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி No: 561. (1622)

இறக்குமதி செய்யப்பட்ட எலெக்ரிக் மோட்டர்கள் பூட்ஸ் இன்ஜினுடன் 960 RPM, 4 HP, 1½ HP, ¾ HP, வேலழகன் தொழிற்சாலை, சுன்னாகம். 1630

### வாடகைக்கு

யாழ்/பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் நவீன வசதிகளுடன், பாதுகாப்பான அறைகள் வாடகைக்கு கொடுக்கப்படும். (பெண்கள் மட்டும்) பல்கலைக்கழக மாணவிகள் விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்பு கொள்க. திருமதி N. இராசதுரை, "கமல வாசா" நந்தாவில், கொக்குவில். 1635

யாழ். ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் டாக்டர் குடும்பத்திற்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் நவீன வசதிகள் கொண்ட வீடு தேவை. தொடர்புகொள்க: செ. விசாகசுந்தரம், கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை. 1619

### சேவை

வருமான வரிக் கணக்கு எழுதிக் கொடுக்கப்படும். நேரில் சந்திக்கவும். KL. M. Krishnapillaiy, 68J - கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 1634

காணிகள் வாங்க விற்க எம்முடன் தொடர்பு கொள்ளவும். கூடிய சீக்கிரம் செய்து கொடுக்கப்படும் அத்துடன் பாஸ்போர்ட் அலுவல்களும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு கொள்க: செல்வா ஆலோசகர் நிலையம், 478/2, கே. கே. எஸ் றோட், யாழ்ப்பாணம். 1547

### ஏல விற்பனை

அளவெட்டி - மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தில் பாவிக்கப்பட்ட பலவிதமான பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. இவ்வேல விற்பனை எதிர்வரும் 12-12-81 சனிக்கிழமை சங்க வளவில் நடைபெறும். அத்துடன் வெற்று நம், பாவிக்கப்பட்ட கோறிசயர், மற்றும் உதிரிப்பாகங்கள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் 100/- கேள்விப்பத்திரங்களை சங்க காரியாலயத்தில் சதம் 50 செலுத்தி பெற்றுக்கொள்ளவும். கேள்வி விண்ணப்பங்களை சங்க காரியாலயத்தில் 11-12-81 பி ப. 3-00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும். பொருட்களை சங்க வளவில் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்
அளவெட்டி-மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்
1615

## இறக்குமதி செய்யப்பட்ட

**ஹல்லர் (China) LM 24-2C**
(நெல் உடைக்கும் இயந்திரம்)
**கிறைண்டர் (Indian)**
(மிளகாய் மா அரைக்கும் இயந்திரம்)
உதிரிப்பாகங்களும்
"லம்பிறெட்டா"
"வெஸ்பா" ஸ்கூட்டர்
உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு.

**கே. ஆர். சிவலோகநாதன் அன் கோ.,**
இல. 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8289
1611

யாழ். லயன்ஸ் கழக

## நத்தார் புதுவருட வாழ்த்து மடல் சித்திரம் வரையும் போட்டி

| | | |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | வயது | 6 - 10 |
| இடைப்பிரிவு | வயது | 11 - 14 |
| மேற்பிரிவு | வயது | 15 - 18 |

மாதிரி விண்ணப்பம்

பெயர்.............................................
முகவரி..........................................
பாடசாலை.......................................
வகுப்பு.................... வயது..................
பிரிவு.................................
........................... ...........................
பெற்றார்/ஆசிரியர் கையொப்பம்

சிங்கர் தையல் நிலையம்

## வழங்கும் நற்செய்தி

யாழ்ப்பாண மக்களின் வசதி கருதி
தினசரி காலை முதல் மாலை வரை தையல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

- தேசிய அலங்கார வேலைப்பாட்டுடன் கூடிய மெசின் தையல்
- டிப்ளோமா வகுப்புக்கள்
- இரண்டு மாத குறுகிய வகுப்புகள்
- இளமங்கையருக்கான நவீன மோஸ்தர் உடை தயாரித்தல்
- க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கான தையல் மீட்டல் வகுப்புக்கள்
- மாணவிகளுக்கும் தொழில் பார்க்கும் பெண்களுக்கும் சனிக்கிழமைகளில் அரை நாள் விடுமுறைகால வகுப்புக்கள்

விபரங்களுக்கு:

# சிங்கர் ஸ்தாபனம்

(பஸ் நிலையத்திற்கு முன்பாக)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

முதல்மொழிக் கல்வி என்பது

# "தமிழ்மொழிக் கல்விக்கு ஆபத்தாகமுடியும்"

## கருத்தரங்கில் உரை

[அலோலி நிருபர்]

"கல்வி வெள்ளை அறிக்கையில் தேர்வுகளுக்கான பாடவிதானத்தில் தாய்மொழிக்குப் பதிலாக முதல்மொழி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்குக்கிழக்குக்கு வெளியே உள்ள தமிழ்ப் பிள்ளைகள் தாய்மொழிக் கல்விக்கு ஏற்ற வசதிகள் இல்லையென்று கண்டால் இன்னொரு மொழியைக் கற்கத் தூண்டக்கூடும். எனவே முதல்மொழி என்பது தமிழ் மொழிக்கல்விக்கு ஆபத்தை ஏற்படுத்தும்",

இவ்வாறு பருத்தித்துறைக் கல்விவட்டம் இளைஞர் ஒன்றியம், இந்து இளைஞர் சங்கம் என்பன இணைந்து ஒழுங்கு செய்த கல்வி வெள்ளையறிக்கை கருத்தரங்கில் உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் சோதிலிங்கம் ஆறுமுகம் குறிப்பிட்டார். வடமராட்சிப் பாடசாலைகள் அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர் திரு மு பொ வீரவாகு தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி அதிபர் செல்வி றூபி மேகன் விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து உரையாற்றியகலாநிதி ஆறுமுகம், ஐந்தாம் வகுப்புப் பரீட்சைத் திட்டத்தை நீக்குவதனால் ஏழைப்பிள்ளைகளின் கல்வி வசதி கடுமையாகப் பாதிக்கப்படும் அத்துடன் கல்வி பரம்பையும் கல்வித்திட்டத்தையும் மிகத் தெளிவாக விளக்கினார்.

யாழ் பல்கலைக்கழகப் பொருளியற்துறை) பேராசிரியர் என் பாலகிருஷ்ணன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது! 1978ம் ஆண்டு உயர் கல்விச் சட்டத்தின் கீழ் ஏழு பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. புதிய வெள்ளை அறிக்கை இந்தப் பல்கலைக்கழகங்களுக்கான தெரிவு எந்த அடிப்படையில் நடைபெறும் என்பது தெளிவாக்கப்படவில்லை.

விலங்கியற்துறைப் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது பரீட்சைகள் மூலம் மாணவர் திறனை அளவிடுவது சிறந்த வழியாகும். கல்வி வெள்ளை அறிக்கை கூறும் தொடர் மதிப்பீடு நடைமுறையில் அசாத்தியமானது. வெள்ளை அறிக்கை வளர்ந்து விரிந்துள்ள விஞ்ஞானக்கல்வியைச் சுருக்கி விடக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

கல்வி வெள்ளை அறிக்கையின் பிரகாரம் இனிமேல் புதிய பல்கலைக்கழகங்களும் திறக்கப்படமாட்டாது. உள்ள பல்கலைக்கழகங்களும் வளர்ச்சியடைய முடியாதநிலை காணப்படுகிறது. இது உயர் கல்விக்கு ஒரு சாபக்கேடாகும்.

## குதுப்மினர் கோபுரவிபத்து: 40 சடலங்கள் கையளிப்பு

புதுடில்லி டிச. 6 — சரித்திரப்பிரசித்தி பெற்ற குதுப்மினர் கோபுரத்தின் ஏணிப்படிகள் முறிந்ததனால் நெரிசலினால் இறந்தவர்களின் 40 சடலங்கள் அடையாளம் காணப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த விபத்தில் 45 பேர் மரணமாகியுள்ளனர். இவர்களில் அதிகமானோர் பள்ளிச் சிறுவர்களாவர். விபத்து நடந்த இடத்துக்கு பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேரில் விஜயம் செய்தார். காயமுற்றவர்களை அவர் ஆஸ்பத்திரியில் சென்று பார்த்தார்.

264 அடிகள் உயரமுள்ள குதுப்மினர் கோபுரம் 700 ஆண்டுகள் பழமையானது.

## அபின் வைத்திருந்தவருக்கு ரூ. 2 ஆயிரம் அபராதம்

[யாழ்ப்பாணம்]

850 கிராம் அபின் வைத்திருந்த ஒருவருக்கு உதவி சுங்க சேகரிப்பாளர் எஸ். எம். ஜே சேகரத்தினம் 2000 ரூபா அபராதம் விதித்ததுடன் அபினையும் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்டார்.

தாவடியைச் சேர்ந்த பொன்னம்பலம் இராசதுரை என்பவரிடமிருந்து 850 கிராம் அபினை யாழ். குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் றூப். சார்ஜன்டுகள் இலங்கைத்துரை. ஜேசுதாசன், பொலீஸ் உத்தியோகத்தர் ரி. அருச்சுனன் ஆகியோர் கைப்பற்றியதுடன் அவரையும் கைது செய்து உதவி சுங்க சேகரிப்பாளர் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

அவருக்கு மேற்குறிப்பிட்ட அபராதம் விதிக்கப்பட்டது. (மா)

அமரர் திருச்செல்லம்

## "தமிழர் பிரச்னையை உலகறியச்செய்தவர்"

### படத்திறப்பில் அமிர்தலிங்கம்

(மட்டுவில்)

"தமிழினத்தின் புதிய திருப்பமாக தொண்டின் மூலம் முதன்மை பெற்றவர் அமரர் திருச்செல்வம் தமிழ்மக்களிற்கு இன்னல் ஏற்பட்ட போதெல்லாம் தமிழ்மக்களிற்காக குரல் கொடுத்தவர் மாத்திரமல்ல அரசாங்கத்திற்கும் எங்களுக்குமிடையில் சமாதான தூதுவராகவும் செயல் பட்டவர்"

இவ்வாறு சாவகச்சேரி நகரசபை பொதுநூலகத்தில் அமரர்கள் திருச்செல்வம், புனிதம் திருச்செல்வம் ஆகியோரின் திருவுருவப்படங்கள் திரைநீக்கவிழா சாவகச்சேரி நகரசபைத்தலைவர் திரு சி. க. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற போது அமரர் திருச்செல்வத்தின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து உரையாற்றுகையில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: "அரசாங்கங்களுடன் நாம் ஒப்பந்தங்கள் செய்தபோதும் முன்னின்று உழைத்தவர் அமரர் திருச்செல்வம் தமிழ் இனப் போராட்டத்தில் பக்கபலமாக இருந்தவர். சத்தியாக்கிரகத்தின்போது சமாதான தூதுவராக இருந்தபோதும் கைது செய்யப்பட்டவர்" என்றார்.

தமிழ் மக்கள் இனிமேல் சேர்ந்து வாழமுடியாது என்ற நிலைக்கு தள்ளப்பட்டு 1976ம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டுத் தீர்மானத்தின் பின் நாங்கள் கைது செய்யப்பட்டு "ட்ரையல் அட்பார்" விசாரணையின்போது தமிழ் மக்கள் சார்பில் ஆஜராகி தமது வாதத்திறமையினால் தமிழ்மக்கள் பிரச்னையை உலகறியச் செய்தவர் அமரர் திருச்செல்வம் அவர்கள்" என்றார் திரு. அமிர்தலிங்கம்.

யாழ். அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. க நடராசா, யாழ். முதல்வர் திரு இராஜா விசுவநாதன், சாவகச்சேரி எம். பி. வி. என். நவரத்தினம் திரு. கு. நேசையா பிஷப் குலேந்திரன் இன்னும் பலரும் உரையாற்றினார்கள். (கு)

வெளியார் பயமுறுத்தலை

## எதிர்நோக்க இந்தியா தயார்!

### பிரதமர் இந்திரா கூறுகிறார்

புதுடில்லி, டிச. 5 — எந்தவொரு வெளியார் பயமுறுத்தலுக்கும் இந்தியா தயாராகவே இருக்கிறதென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறினார்.

எந்த அபாயத்தை சந்திக்க இந்தியாவின் சகல பாதுகாப்பு படைகளும் ஆயத்தமாக இருக்கின்றனவென்று திருமதி காந்தி கூறினார்.

இந்திரா காங்கிரஸ் ஆதரவாளர்கள் மத்தியில திருமதி காந்தி பேசினார்.

அண்டை நாடுகளில் ஆயுதங்கள் குவிக்கப்படுவதையும் இந்து சமுத்திரத்தில் வல்லரசு போட்டி அதிகரிப்பதையும் குறிப்பிட்ட திருமதி காந்தி இந்துசமுத்திரப் பிராந்தியம் அமைதிப் பிரதேசமாக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

இந்திய அரசின் மீது மாசு கற்பிப்பதற்காக எதிர்க்கட்சியினரும் பத்திரிகைகளும் முயன்றுவருகின்றன. ஹரிஜனங்களதும் ஏழைகளதும் பிரச்னைகளைப் பயன்படுத்தி பயன்பெறுவதற்கு எதிர்க்கட்சிகள் முயல்வதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

## வவுனியா புத்தர் சிலைக்கு நிரந்தர அத்திவாரமிட முயற்சி?

[யாழ்ப்பாணம்]

வவுனியாவில் பெரும் சர்ச்சையை கிளப்பி விட்டிருக்கும் புத்தர் சிலையை நிரந்தரமாக அமைக்கும் நோக்குடன் இனந்தெரியாத நபர்களால் அத்திவாரமிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிகிறது.

கடந்த புதன்கிழமை நடுநிசியில் குறிப்பிட்ட சிலைக்கு அருகில் அத்திவாரம் வெட்டப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து வவுனியா மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எம். சிற்றம்பலம் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக அந்த முயற்சி கைகூடவில்லை என்றும் பொலிசார் அவ்விடத்திற்குச் சென்ற போது எவரும் அங்கு காணப்படவில்லை என்றும் தெரிகிறது, இடமும் இன்னமும் அப்படியே உள்ளதாம்.

கடந்த புதன் கிழமையே இப்புத்தர்சிலை விவகாரம் குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டதும் குறித்த புத்தர் சிலைக்கு இரவு பகல் பொலிஸ் காவல் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எலும்புடன் 28 ரூபாவாகவும் விற்கப்படவேண்டும்.

மாட்டிறைச்சி மாநகரசபை, நகரசபை, பட்டினப்பகுதிகளில் எலும்பில்லாமல் ஒரு கி. கிராம் 16 ரூபாவாகவும் எலும்புடன் 14 ரூபாவாகவும் கிராமப்பகுதிகளில் எலும்பில்லாமல் 15ரூபாவாகவும், எலும்புடன் 13 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவேண்டும்

சென்ற வெள்ளிக்கிழமை யாழ் மாவட்ட செயலகத்தில் இறைச்சி விலைகளை நிர்ணயிப்பதற்கான கூட்டமொன்று யாழ் மாவட்ட உள்நாட்டு வியாபாரத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு த மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில், யாழ் மாவட்ட பாவனையாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், மாநகர, நகர சபைகளின் தலைவர்கள், வர்த்தகத்திணைக்கள உத்தியோகத்தர்கள் இறைச்சி வியாபாரிகள் கலந்துகொண்டனர்.

இவ்விலைகள் ஜனவரி மாதத்திலிருந்து அமுலபடுத்தப்படவிருக்கின்றன. (மா)

## கிளிநொச்சி—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டங்கள் வழங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் இவற்றை கொடுக்க விரும்புபவர்கள் சாவகச்சேரியிலுள்ள அறவழிப் போராட்டக்குழு பணிமனையில் கொடுத்துதவுமாறு அறவழிப்போராட்டக் குழுச் செயலாளர் கேட்டுள்ளார். கா

## கொள்ளையர்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வைத்திய அதிகாரி டாக்டர் கே. சண்முகநாதன் பொலிசாருக்குத்தகவல் கொடுத்தார். தாக்குண்ட வீட்டாரும் பொலிசுக்கு தகவல் கொடுத்தனர் பகல் சுமார் 1 மணிவரை பொலிசார் ஸ்தலத்திற்கு விசாரணை செய்ய வரவில்லையாம் பொதுமக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டுச் செல்கிறார்கள் எதுவித பொருட்களும் கொள்ளையடிக்கப்படவில்லை. அனைவரும் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளனர். தாக்குதலுக்குள்ளான கணபதிப்பிள்ளை இராஜரத்தினம், கார்த்திகேசு வேதநாயகம் இரங்கநாயகி ஆகிய மூவரும் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மத்தியகிழக்கில் 1,500 பேர் கஷ்டம் அனுபவிக்கின்றனர்

(கொழும்பு)

மேற்காசியாவில் வேலைபார்க்கும் 1500 இலங்கையர்கள் அங்கு தாம் அனுபவிக்கும் கஷ்டங்கள் பற்றி இலங்கை தொழில் அமைச்சுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இம் முறைப்பாட்டுக்காரர்களில் பெரும்பாலானோர் பெண்களாவர். இவர்களில் பலர் அங்கு பணிப்பெண்களாகக் கடமையாற்றுகின்றனர், தகாத செய்கைகளைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தமக்கு ஏற்படுவதாகவும், விடுமுறை, சம்பளம் போன்றவற்றில் கடுமையான கட்டுப்பாடுகள் நிலவுவதாகவும், அப்பெண்கள் தமது புகாரில் தெரிவித்துள்ளனர்

இவர்களில் அநேகர் பதிவு செய்யப்படாத முகவர்நிலையங்களுக்கூடாகவே தொழில் வாய்ப்புக்களைப் பெற்றவர்கள் தொழில் அமைச்சைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ)

## அடிகளின் உதவி

[யாழ்ப்பாணம்]

அருட்திரு நீக்லஸ் அடிகளின் பிறந்தநாளைக் கொண்டாடவென சேர்க்கப்பட்ட பணத்தில் அன்னார் வேண்டுகோளுக்கிணங்க கிளிநொச்சி அகதிகளுக்கு உதவி அளிக்கப்படுகிறது. மழையில் வாடும் மக்களுக்கு உதவுவதே தனக்குப் பிடித்தமான செய்கையென அடிகள் கேட்டுக்கொண்டதை அடுத்து பிறந்தநாள் ஆடம்பர கொண்டாட்டங்கள் கைவிடப்பட்டு விசேட நற்கருணை பலி பூசை மட்டும் இன்று காலை நடைபெறுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 65-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், [illegible] வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலய அச்சகத்தில் 1981 ம் ஆண்டு டிசம்பர் 6-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper. The General P. O. Sri Lanka Regd.Q. B. 10088/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: [illegible]